**கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை**
**அபிவிருத்தி அமைச்சு**

# இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்

## பதவி வெற்றிடம் - தலைமை அலுவலகம்

முழு அரசுக்கு சொந்தமான நிறுவனம் ஒன்றான இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட் நிறுவனத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட பதவிக்காக தகுதியுடைய விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. சந்தைப்படுத்தல் முகாமையாளர் (Marketing Manager)

முகாமைத்துவ சேவை தரம் (MM-1-1)

வெற்றிடம் உள்ள இடம் - தலைமை அலுவலகம் (வெற்றிடம்-01)

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

**கல்வி மற்றும் தொழில் தகைமை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் இருந்து சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் சார்ந்து பெற்றுக்கொண்ட பட்டம்

மற்றும்

பட்டப்படிப்பு தகைமையை பெற்ற பின்னர் அரச திணைக்களம்/ கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபை/ அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றில் குறித்த விடயப் பரப்பில் முகாமைத்துவ தரத்தில் ஓர் ஆண்டு (01) தகைமை

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

கீழுள்ள தகைமைகளில் ஒன்றை பெற்றிருத்தல்.

(1) மேல் குறிப்பிடப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்.

(2) கனிஷ்ட முகாமைத்துவ (JM-1-2) சேவை தரம் சார்ந்த துறையில் குறைந்தது ஐந்து (5) ஆண்டுகள் திருப்தியான சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

**MM-1-1, சேவை தரம் சார்ந்து சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவு**

முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 இற்கு அமைய

சம்பள குறியீட்டு இலக்கம் - MM-1-1, ரூபா 53,175/- = 1,375x10, 1,910x15 = 95,575/-

ரூபா 53,175/- ஆகிய ஆரம்ப சம்பள படியின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும்.

உள்ளக விண்ணப்பதாரர்களை பணியமர்த்தும்போது நிறுவப்பட வேண்டிய சம்பள நடைமுறை நிறுவனக் கோவையின் VII ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய தீர்மானிக்கப்படும்.

வயதெல்லை: 22 வயதுக்கு குறையாதிருத்தல் வேண்டும் என்பதோடு 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

**கொடுப்பனவு மற்றும் நன்மைகள்**

01. திறைசேரி அங்கீகரித்த ரூபா 17,800/- ஆகிய வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு
02. மாதாந்த உணவுக் கொடுப்பனவு – தினசரி வருகை அடிப்படையில் அமையும்.
03. மாதாந்த வருகை ஊக்கக் கொடுப்பனவு – தினசரி வருகை அடிப்படையில் அமையும்.
04. மாதந்த உற்பத்தி அடிப்படையில் செலுத்தப்படும் உற்பத்தி ஊக்கக் கொடுப்பனவு.
05. ரூபா 5,000/- மாதாந்த இடைநிலை கொடுப்பனவு
06. 02/2022 ஆம் இலக்க அரச வர்த்தக சுற்றுநிருபத்தின் பிரகாரம் தொடர்பாடல் கட்டண கொடுப்பனவு.
07. 05/2017 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம் பதவியுடன் தொடர்புடைய நேரடி சேவைக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு தொழில்துறை கொடுப்பனவு செலுத்தப்படும்.
08. திறைசேரி அங்கீகரித்த ரூபா 1800/- ஆகிய மாதாந்த போக்குவரத்து கொடுப்பனவு

**நன்மைகள்**

01. வருடாந்த மிகை ஊதியம் (போனஸ்)
02. சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலையில் அனுமதித்தல் மற்றும் வெளிச் சிகிச்சைக்காக காப்புறுதி
    - i. ஓர் ஆண்டுக்கு ரூபா 300,000/- வைத்தியசாலையில் அனுமதித்தல் காப்புறுதித் திட்டம் (குடும்ப உறுப்பினர்கள் உட்பட)
    - ii. ஓர் ஆண்டுக்காக ரூபா 25,000/- வெளி சிகிச்சை கட்டணத்திற்கு மீளளிப்பு (குடும்ப உறுப்பினர்கள் உட்பட)
    - iii. ஓர் ஆண்டுக்காக ரூபா 10,000/- பற்சிகிச்சை கட்டணத்திற்கு மீளளிப்பு (குடும்ப உறுப்பினர்கள் உட்பட)
03. நிலையான (உறுதியான) வரம்பு வரை மருத்துவ செலவுகளை வழங்கல்.
    - i. வெளி மருத்துவ உதவி முறையின் கீழ் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ரூபா 12,000/- கொடுப்பனவு
    - ii. வெளி மருத்துவ உதவி முறையின் கீழ் ஆண்டுக்கு ஒருமுறை வெளி சிகிச்சைக்காக ரூபா 5000/- பணம் வழங்கல்
    - iii. குழந்தை பிரசவத்திற்கு 02 ஆண்டுகளுக்கு ஒருமுறை ரூபா 12,000/- பணம் வழங்கல்
04. இது தவிர நிலையான ஊழியர்களுக்கான வேறு நன்மைகளை பெறுவதற்கு உரித்தாவார்.
05. ஊழியரினால் ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 10%, நிறுவனத்தினால் 15% பங்களிப்பு மற்றும் ஊழியர்களின் பொறுப்பு நிதியத்திற்காக நிறுவனத்தின் பங்களிப்பு 3%.

**பொது நிபந்தனைகள்**

1. அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.
2. பதவிக்கு வழங்கப்படும் பணிகளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு மற்றும் நாட்டின் எந்த ஒரு பகுதியிலும் பணியாற்றுவதற்கு தேவையான உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
3. சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.
4. தேர்வு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்களின் முழுமையாக ஈட்டப்படுகின்றவற்றில் ஈட்டும்போது செலுத்தும் வரி (Pay as You Earn Pay Tax) அறவிடப்படும்.

அரச சேவை/ கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபை மற்றும் அரச நிறுவனங்களில் பணியில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் அவர்களின் விண்ணப்பங்களை குறித்த திணைக்களத்தின்/ நிறுவனத்தின் தலைவர்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேல் குறிப்பிடப்பட்ட பதவிக்காக விண்ணப்பங்களை அனுப்பும்போது உங்களது மின்னஞ்சல் முகவரியை உள்ளடக்கி உங்களது கையொப்பத்துடன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும் என்பதோடு, உங்களது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அனைத்து கல்வி, தொழில் மற்றும் சேவை சான்றிதழ்களின் நிழல் பிரதியை அத்துடன் அனுப்புதல் வேண்டும். (முறையான வகையில் சான்றிதழ்களை அனுப்பாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தெளிவாக குறிப்பிட்டு ராஜகிரிய, சரண மாவத்தை, இலக்கம் 341/13 இல் இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட் இன் தலைவருக்கு 2025 பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை கனிப்பொருள் மணல் லிமிடெட்**
**இலக்கம் 341/13, சரண மாவத்தை, ராஜகிரிய**